# 11-11-2024 செய்தி

## 9 மாதங்களில் இந்தியாவில் 3,200 பேர் உயிரிழப்பு

**அசாதாரண தட்ப வெப்பம்**

- 2024 ஆம் ஆண்டின் முதல் 9 மாதங்களில் 93 சதவீத நாள்கள் அதாவது மொத்தமுள்ள 274 நாள்களில், 255 நாள்கள் அசாதாரண தட்பவெப்ப நிலையை இந்தியா சந்தித்துள்ளது.
- இதன் காரணமாக, நாடு முழுவதும் 2,35,862 வீடுகள் மற்றும் கட்டடங்கள் சேதமடைந்தன. 3,238 பேர் உயிரிழந்தனர். 9,457 கால்நடைகள் உயிரிழந்தன. 32 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் பயிரிடப்பட்டிருந்த பயிர்கள் முழுமையாக சேதமடைந்தன.
- மனித உயிரிழப்பு, முந்தைய ஆண்டைக் காட்டிலும் கூடுதலாகும். 2023 –ஆம் ஆண்டின் முதல் 9 மாதங்களில் 273 நாள்களில், 235 நாள்கள் அசாதாரண தட்பவெப்ப நிலையைச் சந்தித்தன. இதனால், 2,923 பேர் உயிரிழந்தனர். 92,519 கால்நடைகள் உயிரிழந்தன. 80 293 வீடுகள் சேதமடைந்தன. 18.4 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் பயிரிடப்பட்டிருந்த பயிர்கள் சேதமடைந்தன.

| உயிரிழப்பு | பயிர்ச்சேதம் (ஹெக்டேர்) |
|---|---|
| 1. கேரளம் 550 | 1. மகாராஷ்டிரம் 19,51,801 |
| 2. மத்திய பிரதேசம் 353 | 2. மத்திய பிரதேசம் 25,170 |
| 3. அஸ்ஸாம் 256 | 3. ஆந்திர பிரதேசம் 22,840 |

**பாதிப்பு நாள்கள் அதிகரிப்பு**

- நிகழாண்டில் அசாதாரண தட்ப வெப்ப நிலை பாதிப்பு நாள்களின் எண்ணிக்கை 27 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் அதிகரித்திருப்பது தெரியவந்துள்ளது.
- அதிகபட்சமாக, மத்திய பிரதேச மாநிலத்தில் 176 நாள்கள் அசாதாரண தட்பவெப்பநிலை நிலவியுள்ளது. கர்நாடகம், கேரளம் மற்றும் உத்தர பிரதேச மாநிலங்களில் அசாதாரண தட்பவெப்பநிலை பாதிப்பு நாள்களின் எண்ணிக்கை 40 –க்கும் அதிகமாகக் கூடுதலாகியுள்ளன.
- அசாதாரண தட்பவெப்பநிலையால் ஏற்பட்ட உயிரிழப்பு எண்ணிக்கையைப் பொருத்தவரை 550 நபர்கள் உயிரிழப்புடன் கேரளம் முதலிடத்தில் உள்ளது. இதற்கு அடுத்த இடங்களில் மத்திய பிரதேசம் (353 உயிரிழப்புகள்) அஸ்ஸாம் (256 உயிரிழப்புகள்) உள்ளன.

## ஐரோப்பிய நாடுகளுக்கு இந்தியாவின் பெட்ரோல், டீசல் ஏற்றுமதி 58% உயர்வு

- மேற்கத்திய நாடுகளின் "நேட்டோ" கூட்டமைப்பில் இணைய முயற்சித்த உக்ரைனுக்கு எதிராக ரஷியா கடந்த 2 ஆண்டுகளுக்கும் மேலாக போரில் ஈடுபட்டுள்ளது.
- இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவும் போர்ச் செலவுக்கான முக்கிய வருவாய் ஆதாரத்தை முடக்கும் முயற்சியிலும் ரஷிய கச்சா எண்ணெய் இறக்குமதியின் மீதான விலை உச்சவரம்பு – தடையை ஜி7 மற்றும் ஐரோப்பிய யூனியன் உறுப்பு நாடுகள் கடந்த 2022, டிசம்பரில் அறிவித்தன.
- எனினும், ரஷிய கச்சா எண்ணெயை சுத்திகரித்து உற்பத்தி செய்யப்படும் பெட்ரோலியப் பொருள்களுக்கு எந்த தடையும் விதிக்கப்படவில்லை. எனவே, பொருளாதாரத்தடை விதிக்காத மூன்றாம் தரப்பு நாடுகள், ரஷியாவிடமிருந்து கச்சா எண்ணெயை அதிக அளவில் இறக்குமதி செய்து, பெட்ரோல், டீசல் உள்ளிட்ட எண்ணெய் பொருள்களாக சுத்திகரித்து, மேற்கத்திய நாடுகளுக்கு சட்ட பூர்வமாக ஏற்றுமதி செய்து வருகின்றன.
- உக்ரைன் போருக்குப் பிறகு ரஷிய கச்சா எண்ணெயை அதிக அளவில் வாங்கும் நாடாக சீனாவுக்கு அடுத்தபடியாக 2 –ஆவது இடத்தில் இந்தியா (37 சதவீதம்) உள்ளது.
- கடந்த அக்டோபர் மாதத்தில் கூட 200 கோடி யூரோ மதிப்பிலான ரஷிய கச்சா எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.
- அதன் தொடர்ச்சியாக, ஐரோப்பிய யூனியன் நாடுகளுக்கு பெட்ரோலியப் பொருள்களை ஏற்றுமதி செய்யும் மிகப்பெரிய நாடாக இந்தியா மாறியுள்ளது.
- நிகழாண்டின் முதல் மூன்று காலாண்டுகளில் இந்தியாவில் இருந்து ஐரோப்பிய யூனியனுக்கான ஏற்றுமதி முந்தைய ஆண்டின் இதே காலகட்டத்தை விட 58 சதவீதம் அதிகரித்துள்ளது என்று எரிசக்தி மற்றும் தூய்மை காற்று ஆராய்ச்சி மையத்தின் (சிஆர்இஏ) சமீபத்திய அறிக்கை தெரிவிக்கிறது.
- உக்ரைன் போருக்கு முன்னர் ஐரோப்பிய யூனியன் நாடுகள் நாளொன்றுக்கு சராசரியாக 1.54 லட்சம் பீப்பாய் டீசல் மற்றும் ஜெட் எரிபொருளை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்தன. இப்போது இந்த அளவு கிட்டத்தட்ட இருமடங்காகியுள்ளது.
- கடந்தாண்டு டிசம்பர் வரையிலான 13 மாதங்களில் ரஷிய கச்சா எண்ணெயிலிருந்து தயாரிக்கப்பட்ட 850 கோடி யூரோ மதிப்பிலான எண்ணெய் பொருள்களை இந்நாடுகள் இறக்குமதி செய்திருப்பதாக கருதப்படுகிறது.
- மூன்றாம் நாடுகளுக்கு வருவாய் : எண்ணெய் பொருள்களை தொடர்ந்து இறக்குமதி செய்வதன் மூலம் கச்சா எண்ணெய் சுத்திகரிப்பு மற்றும் ஏற்றுமதியிலிருந்து கிடைக்கும் ரஷிய வருவாயை மூன்றாம் நாடுகளுக்கு ஐரோப்பிய யூனியன் விரிவுபடுத்தியுள்ளது.
- ரஷிய கச்சா எண்ணெய் தள்ளுபடி விலையில் கிடைத்தாலும், பெட்ரோலியப் பொருள்களை முழு விலையிலேயே இந்நாடுகள் ஏற்றுமதி செய்வது குறிப்பிடத்தக்கது.

## இந்தியப் பங்குச் சந்தையில் இதுவரையில் ஐபிஓ மூலம் ரூ. 1.19 லட்சம் கோடி திரட்டல்

**உலகளவில் 2 -வது இடத்தில் இந்தியா**

- ஐபிஓ மூலம் அதிகம் நிதி திரட்டிய பங்குச் சந்தைகள் வரிசையில் உலக அளவில் இந்தியா இரண்டாம் இடம் பிடித்துள்ளது.
- ரூ. 2.20 லட்சம் கோடி நிதி திரட்டி அமெரிக்கா முதல் இடத்திலும், ரூ. 89,800 கோடி நிதி திரட்டி சீனா மூன்றாவது இடத்திலும் உள்ளன.
- நடப்பு ஆண்டில் மட்டும் இந்தியாவில் 68 நிறுவனங்கள் ஐபிஓ வெளியிட்டு பங்குச் சந்தையில் பட்டியலாகியுள்ளன.
- இந்தியாவின் பொருளாதாரம் வலுவாக இருப்பதாலும், கார்ப்பரேட் நிறுவனங்களின் வருவாய் ஆரோக்கியமாக இருப்பதாலும் நிறுவனங்கள் புதிய பங்கு வெளியீட்டில் ஆர்வம் காட்டுகின்றன என்று இத்துறை சார்ந்த நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.
- இந்தியாவில் பங்குச் சந்தை முதலீடு செய்பவர்களின் எண்ணிக்கை தொடர்ச்சியாக அதிகரித்து வருகிறது. கடந்த அக்டோபர் மாத நிலவரப்படி நாட்டில் 17.9 கோடி டிமேட் கணக்குகள் உள்ளன. இவற்றில் 3.5 கணக்குகள் இவ்வாண்டில் தொடங்கப்பட்டுள்ளன. சராசரியாக மாதத்துக்கு 35 லட்சம் டிமேட் கணக்குகள் தொடங்கப்பட்டுள்ளன.

## விண்வெளிப் பயண ஒத்திகை இந்தியாவின் கனவு என்ன?

- இந்தியாவின் முதல் 'அனலாக் விண்வெளிப் பயணத்' துக்கான ஏற்பாடுகள், லே நகரின் அருகே லடாக்கில் நிறுவப்பட்டுவரும் விண்வெளிப் பயண ஒத்திகை நிலையத்தில் தொடங்கப்படவிருக்கின்றன.
- இஸ்ரோவின் மனித விண்வெளிப் பயண மையம், விண்வெளிக் கட்டிடக் கலை நிறுவனம், ஆகா விண்வெளி ஸ்டுடியோ (Aaka Space Studio), லடாக் பல்கலைக்கழகம், மும்பை ஐஐடி, லடாக் தன்னாட்சி மலை மேம்பாட்டு கவுன்சில் ஆகிய நிறுவனங்கள் இணைந்து இந்த ஒத்திகை நிலையத்தை உருவாக்கி வருகின்றன.

**அனலாக் விண்வெளிப் பயணம் என்றால்?**

- குழந்தைகள் தங்களுக்குள் சிலரை ஆசிரியர்களாகவும், சிலரை மாணவர்களாகவும் பாவித்து விளையாடுவது போன்றது ஒத்திகை மையம், விளையாட்டு போன்ற இந்த ஒத்திகை மூலம் இப்படிப்பட்ட பயணத்தின்போது என்னென்ன சிக்கல்கள் ஏற்படலாம் என இனம் காண முடியும். சிக்கல்களை வரும்முன்னே இனம் கண்டு தீர்வுகளை இனம் காணுவதுதான் 'அனலாக் விண்வெளிப் பயணம்' என்னும் விண்வெளிப் பயண ஒத்திகை.

**ஒத்திகை எப்படி நடைபெறும்?**

- ஒத்திகை மையத்தில் ஒரு நபரோ பயணப் பணிக்குழுவோ விண்கலம்போல வடிவமைக்கப்பட்ட இடத்தின் உள்ளே நுழைவார்கள். அங்கே விண்கலத்தில் என்னென்ன வசதிகள் இருக்குமோ அவை மட்டுமே இருக்கும். உணவு போன்றவற்றைப் பொதிந்து வைத்துவிடுவார்கள். நீர் மறுசுழற்சி, காற்றிலிருந்து கார்பன் டை ஆக்சைடை நீக்கி மறுபடி ஆக்ஸிஜன் செறிவு ஏற்றுவது போன்றவற்றுக்குப் பல கருவிகள் இருக்கும்.
- விண்வெளிப் பயணத்தில் ஏற்படும் அதே அனுபவங்கள் இந்த ஒத்திசையில் பெருமளவு செயல்படுத்தப்படும், எடுத்துக்காட்டாக, இஸ்ரோவின் திட்டப்படி ஒரு நபர் 21 நாள்கள் லடாக்கில் அமையவிருக்கும் ஒத்திகை மையத்தில் தங்கி சோதனை மேற்கொள்வார்.

**ஏன் லடாக்?**

- லடாக் ஒரு குளிர் பாலைவனம், பெரும்பாலும் மைனஸ் டிகிரி குளிர் நிலவும், செவ்வாய் கோளிலும் நிலவிலும் இதே போன்ற நிலைமை தான். மேலும், லடாக்கின் புவியமைப்பும் நிலவு / செவ்வாய்க் கோளின் நிலப்பரப்பை ஒத்துள்ளது.
- எனவே, அந்தக் கோள்களை ஆய்வுசெய்ய எடுத்துச்செல்லும் கருவிகளை முதலில் இங்கே சோதனை செய்து மேம்படுத்த முடியும். மேலும், விண்வெளியில் தனிமையில் தான் பயணம் மேற்கொள்ள வேண்டும். லடாக்கில் மக்கள்தொகை சொற்பம் என்பதால் ஒத்திகைக்குத் தேவையான தனிமைச் சூழல் இருக்கும்.

**ஒத்திகைப் பயணம் ஏன் அவசியம்?**

- இதுவரை இஸ்ரோ செயற்கைக்கோள்களை மட்டுமே விண்வெளிக்கு அனுப்பியது. சமீப காலமாக மற்ற கோள்களுக்கு விண்கலங்களை அனுப்பி வெற்றி கண்டுள்ளது.
- ஆனால், ககன்யான் திட்டத்தின் மூலமாக மனிதர்களை விண்வெளிக்கு அனுப்பத் திட்டமிட்டுள்ளது.
- மேலும், மனிதர்கள் தங்கி ஆய்வுசெய்ய விண்வெளி ஆய்வு மையம் எனப் பல எதிர்காலத் திட்டங்களை இஸ்ரோ வைத்துள்ளது.
- மனிதர்களை விண்வெளிக்கு அனுப்ப இதுபோன்ற ஒத்திகை சோதனைகள் அவசியம்.
- சமீபத்தில், 2019 இல் நாசாவும் ஐரோப்பிய விண்வெளி நிறுவனமும் இணைந்து இரண்டு வார கால நிலவுப் பயண ஒத்திகையை நடத்திப் பார்த்தன.
- இந்த ஒத்திகைப் பயணம் தொடங்கிய இரண்டாம் நாளே குடிநீர் அளவு அபாயகரமாகக் குறைந்துபோனது.
- அதுபோன்ற எதிர்பாராச் சிக்கல் வந்தால் எப்படி அணுகுவது என இதுபோன்ற ஒத்திகைப் பயணங்கள் நமக்கு வழிகாட்டும்.

**மற்ற ஒத்திகை மையங்கள்**

- உலகிலேயே முதல் ஒத்திகை மையத்தை 1972ல் சோவியத் யூனியன் சைபீரியாவில் நிறுவியது. சுமார் 10 ஒத்திகைகள் இதில் மேற்கொள்ளப்பட்டன.
- அதல் ஒன்று, 180 நாள்கள் நீண்ட ஒத்திகை, BIOS-3 எனும் இந்த ஒத்திகை ஆய்வுகள் மூலம் அந்த நேரத்தில் இருந்த தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, 99% காற்றையும், 85% தண்ணீரையும், தோராயமாக 50% உணவு – ஊட்டச்சத்துகளையும் மறுசுழற்சி செய்ய முடிந்தது.